**SEC 4 / 5 HOW TO GET FULL SCORE IN TAMIL ORAL - REVISION GUIDE**
**உயர்நிலை 4 / 5 வாய்மொழி சிறப்புத் தேர்ச்சிக்கான வழிகாட்டி நூல்**

## பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| | வாய்மொழி சிறப்புத் தேர்ச்சிக்கான வழிகாட்டி | 1 - 3 |
| 1 | இயங்கலை வகுப்பு (Home Base Learning) | 4 - 10 |
| 2 | பகுதி நேர வேலை (Part-time Job) | 11 - 17 |
| 3 | ஆடம்பர வாழ்க்கை (Luxury Lifestyle) | 18 - 24 |
| 4 | வாழ்நாள் கல்வி (Lifelong Learning) | 25 - 32 |
| 5 | கேளிக்கை நிகழ்வுகள் (Entertainment Events) | 33 - 39 |
| 6 | விளையாட்டுத் துறைக்குப் பள்ளி கொடுக்கும் முக்கியத்துவம் (Importance Given by School to Sports) | 40 - 46 |
| 7 | மாணவர் பரிமாற்றத் திட்டம் (Student Exchange Programme) | 47 - 53 |
| 8 | சமூக மன்றங்கள் (Community Clubs) | 54 - 60 |
| 9 | உணவுகளின் சொர்க்கம் சிங்கப்பூர் (Singapore - Food Paradise) | 61 - 67 |
| 10 | பணிப்பெண்கள் (Domestic Helpers) | 68 - 74 |
| 11 | தேசிய தினக் கொண்டாட்டம் (National Day Celebration) | 75 - 81 |
| 12 | தொழிற்கல்வி (Technical Education) | 82 - 88 |
| 13 | நேர திட்டமிடல் (Time Management) | 89 - 95 |
| 14 | மருத்துவச் சேவைகள் பற்றிய விழிப்புணர்வு (Medical Service and its Awareness) | 96 - 102 |
| 15 | வெளிநாட்டிற்குச் சென்று படித்தல் (Studying Abroad) | 103 - 110 |
| | விடைத்தாள்கள் | 111 - 125 |

# வாய்மொழிச் சிறப்புத் தேர்ச்சிக்கான வழிகாட்டி

## கருப்பொருளும் சொல்வளமும்

- முதலில் கருப்பொருளைக் கண்டறிய வேண்டும்.
- பின் கருப்பொருள் சார்ந்த சொல்வளங்களை ஊகிக்க வேண்டும்.

## கேள்விகளுக்கு எவ்வாறு பதிலளிப்பது?

- உங்களுடைய கருத்துகளை **P, S, G -** உடன் தொடர்புபடுத்த வேண்டும்
  - a) **P - PERSONAL**
  - b) **S - SCHOOL**
  - c) **G - GOVERNMENT**

**HIDDEN INTENTIONALLY TO PROTECT COPYRIGHTS**

- **P, S, G –** உடன் தொடர்புபடுத்திய கருத்துகளை விவரிக்க (Elaborate) உங்களுக்கு **E, C, S -** களின் துணை வேண்டும்.

**HIDDEN INTENTIONALLY TO PROTECT COPYRIGHTS**

HIDDEN INTENTIONALLY TO PROTECT COPYRIGHTS

- **மனநிலை** சார்ந்த கேள்விகள் கேட்கும் பொழுது, பதிலில் இருக்க வேண்டியவை

HIDDEN INTENTIONALLY TO PROTECT COPYRIGHTS

- **அச்சூழலில் நீ என்ன செய்வாய்** என்ற கேள்விகள் கேட்கும் பொழுது, பதிலில் இருக்க வேண்டியவை

HIDDEN INTENTIONALLY TO PROTECT COPYRIGHTS

# 11. தேசிய தினக் கொண்டாட்டம் (National Day Celebration)

## சொல்வளம்

| | | |
|---|---|---|
| 1. | நாட்டுப் பண் | National Anthem |
| 2. | தேசியக் கொடி | National Flag |
| 3. | அதிபர் | President |
| 4. | தேசிய நாள் அணிவகுப்பு | National Day Parade |
| 5. | சுதந்திரம் | Independence |
| 6. | நாட்டுப்பற்று | Patriotism |
| 7. | இராணுவ அணிவகுப்புகள் | Military Contingents |
| 8. | பல்லின நிகழ்ச்சிகள் | Multicultural Performances |
| 9. | வாண வேடிக்கை | Firework |
| 10. | காவல் அதிகாரிகள் | Police Officers |
| 11. | அரசாங்கத் திட்டங்கள் | Government Plans |
| 12. | தேசிய நாள் பேரணி | National Day Rally |
| 13. | வரலாறு | History |
| 14. | மக்கள் கூட்டம் | Crowd |
| 15. | தேச ஒற்றுமை | National Unity |





<u>**கேள்விகள்**</u>

**1. நமது தேசிய தினம் வருடா வருடம் ஏன் விமரிசையாகக் (Grand) கொண்டாடப்படுகிறது என்று நீ நினைக்கிறாய்?**

| |
|---|
| மேற்கண்ட கேள்வியில் தேசிய தினம் ஏன் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது என்று கேட்கப்பட்டுள்ளதால் - **சுய கருத்து**, **சுய அனுபவத்தைக்** கொண்டு கருத்துகள் கூற வேண்டும். |

| | |
|---|---|
| **Evidence / ஆதாரங்கள்**<br>**What? Why? How?** | • நாடு 1. ______________________ பெற்ற நாளை எந்நாளும் மறவாமல் நினைவில் வைத்துக் கொள்ளும் வண்ணம் அந்நாள், நாட்டு மக்களால் விமரிசையாகக் கொண்டாடப்பட வேண்டும்.<br>• நாடு சுதந்திரம் பெற்ற சரித்திரத்தையும் (History), வரலாற்றுப் பின்னணியையும் (Background) இக்காலத் தலைமுறையினருக்குத் தெரியப்படுத்த தேசிய தினக் கொண்டாட்டம் அவசியம்.<br>• நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய வீரர்களைக் நினைவுகூறும் (Recall) வகையில் தேசிய தின 2. ____________________ கோலாகலமாக இருக்க வேண்டும்.<br>• சுதந்திரம் ஒவ்வொரு நாட்டு 3. ________________________ எவ்வளவு முக்கியம் என்பதை உணர்த்துவதற்கு அந்நாள் பல கலாச்சார பின்னணியிலிருந்து வந்துள்ள மக்களோடு ஒன்றிணைந்து கொண்டாடப்பட வேண்டும்.<br>• வரலாறு மறக்கப்படாமலும் மீண்டும் நிகழாமலும் இருக்க நாட்டு மக்கள் நாடு சுதந்திரம் அடைந்த நாளை ஒற்றுமையுடன் கொண்டாடி நாட்டின் மீது வைத்திருக்கும் மரியாதையை வெளிக்காட்ட வேண்டும். |
| **Consequences / விளைவுகள்** | |
| **தேசிய நாள் கொண்டாடப் படுவதால் /**<br>**Advantages** | • மக்களிடையே நாட்டுப்பற்று (Patriotism) பெருகுவதுடன் தம் நாட்டின் மீது வைத்திருக்கும் மரியாதையும் விசுவாசமும் (Loyalty) அதிகரிக்கும்.<br>• தம் 4. ______________________ முக்கியத்துவத்தை அறிந்து கொள்வதோடு அதன் 5. ______________________________ பாடுபடுவார்கள்.<br>• சுதந்திரம் எவ்வளவு முக்கியம் என்பதை ஒவ்வொரு |

| | |
|---|---|
| | ஆண்டும் கொண்டாடப்படும் தேசிய நாளன்று நன்கு அறிந்து கொள்வர்.<br>• சுதந்திர சுவாசத்தை நமக்கு அளித்த நம் முன்னோர்களின் தியாகத்தை (Sacrifice) எண்ணிப் பார்க்கும் ஒரு நாளாகத் திகழும்.<br>• அடுத்து வரக்கூடிய தலைமுறை (Generation) நாட்டின் சுதந்திரம் எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்பதைத் தெரிந்து கொள்ள தேசிய நாள் கொண்டாட்டம் ஆண்டுதோறும் தொடர்ச்சியாக நடத்தப்பட வேண்டும்.<br>• நாட்டுப்பற்றை 6. _____________________ முடியும். |
| **தேசிய நாள் கொண்டாடப்படாமல் இருந்தால் / Disadvantages** | • மக்களிடையே நாட்டுப்பற்று சற்றுக் குறையத் தொடங்கும்.<br>• நாடு சுதந்திரம் அடைந்த வரலாற்றைத் தெரிந்து கொள்ள முடியாமல் காலப்போக்கில் மறந்துவிடக் கூடும்.<br>• நாட்டின் 7. _______________________ அறியாமல் அடுத்த தலைமுறையினர் சுயநலமாகச் (Selfish) சிந்திக்கத் தொடங்கி தன்னலத்தை முன்நிறுத்துவர்.<br>• சுயநலமாகச் செயல்படும் மக்கள் நாட்டின் நலன் கருதாமல் சுயலாபத்திற்காக நாட்டை மதிக்காமல் பல தீய செயல்களைச் செய்ய முற்படுவர். |
| **Solution / Suggestion - How?**<br>**தீர்வுகள் / ஆலோசனைகள் - எவ்வாறு?** | |
| • நாட்டுப்பற்று ஒவ்வொரு குடிமகனுக்கும் இருக்க வேண்டிய ஒன்றாகும்.<br>• தேசிய நாளை மறவாமல் கொண்டாடுவதால் நாட்டின் மீது நாம் அனைவரும் வைத்திருக்கும் அக்கறையைக் காண முடியும்.<br>• தேசிய நாளைப் புறக்கணிக்காமல் (Without Ignoring) நாட்டுப்பற்றோடும், தேச ஒற்றுமையுடனும் கொண்டாடுவது பின்னாளில் நாட்டின் மகிழ்ச்சி சீர்குலையாமல் (Demolish) 8. ___________________ உறுதி செய்யலாம். | |

(இருவழிக் கலந்துரையாடலுக்கான வினா மாணவர்கள் பேசுவதிலிருந்து கேட்கப்படும்)

**2. சற்று முன் நீங்கள் தேசிய நாள் கொண்டாட்டம் எவ்வளவு அவசியம் என்பதைக் கூறியிருந்தீர்கள். நாட்டை அவமதிக்கும் ஒருவரைப் பார்த்தால் நீங்கள் அவருக்கு என்ன அறிவுரை கூறுவீர்கள்?**

| |
|---|
| மேற்கண்ட கேள்வியில் நாட்டை அவமதித்தால் என்ன உணர்வு ஏற்படும் என்று கேட்கப்பட்டுள்ளதால் - **மனநிலை சார்ந்த கருத்துகளைக்** கூற வேண்டும். |

| | |
|---|---|
| **உணர்ச்சியின் வெளிப்பாடு / Emotions** | முதலில் கடும் கோபம் வரும். நாட்டின் மீது அக்கறையில்லாமல், தேச உணர்வு இல்லாமல் நாட்டுக் குடிமகன் என்று மட்டும் கூறும் அவர்களின் அறியாமையின் (Ignorance) உச்சநிலையைக் கண்டு மனம் வருந்துவேன். |
| **ஏன்? Why?** | நாட்டுப்பற்று என்பது நாட்டில் வாழும் ஒவ்வொரு குடிமகனுக்கும் இருக்க வேண்டியது அத்தியாவசியமாகும்.<br>• நாடு சுதந்திரம் பெற்ற வரலாற்றை அறிந்து கொள்வதன் மூலம் தேசப்பற்றை மேலும் அதிகரித்துக் கொள்ளலாம்.<br>• ஒரு நாடு சுதந்திரம் பெறுவது அவ்வளவு சுலபமான காரியம் அன்று. அதற்காக இரவும் பகலும் பாராது, அயராது உழைத்த நமது 9. _________________________ நினைவில் கொண்டு அவர்களின் 10. _______________________ நன்றி செலுத்தும் வண்ணமாக தேசிய நாளை மக்கள் ஒற்றுமையோடு கொண்டாட வேண்டும்.<br>• நம் நாட்டு மக்களின் ஒற்றுமையைக் கண்டு பிற நாடுகளும் அதனை உதாரணமாகக் கொள்ள வேண்டும். |
| **என்ன செய்ய வேண்டும்?**<br>**What should do?** | • நாடுதான் ஒவ்வொரு குடிமகனின் கண்ணாடி. அதனால், நாம் செய்யும் அனைத்து செயல்களும் நமது நாட்டைப் பிரதிபலிக்கும் (Reflect) என்பதை எந்நாளும் மறவாமல் இருக்க வேண்டும்.<br>• நாட்டை இழிவுபடுத்தும் (Insulting) எந்தக் காரியத்திற்கும் துணை போகாமல், நாட்டின் 11. ____________________ முன்னிறுத்த வேண்டும்.<br>• நாட்டுப்பற்று எவ்வளவு முக்கியம் என்பதை வருங்கால தலைமுறைக்குத் தெரியப்படுத்தும் வண்ணமாக நாம் ஒரு நல்ல குடிமகனாகத் திகழ வேண்டும். |

**3. சிங்கப்பூர் மக்கள் தேசிய தினக் கொண்டாட்டத்தை எவ்வாறு ஆதரிக்கிறார்கள் (Support) என்று நீ நினைக்கிறாய்?**

| |
|---|
| மேற்கண்ட கேள்வியில் சிங்கப்பூர் மக்கள் தேசிய தினக் கொண்டாட்டத்தை எவ்வாறு ஆதரிக்கிறார்கள் என்று கேட்கப்பட்டுள்ளதால் - **மக்கள் என்னென்ன செய்கிறார்கள்** என்ற கருத்துகளைக் கூற வேண்டும். |

| | |
|---|---|
| **பதில் : மக்கள் பல்வேறு நடவடிக்கைகள் வாயிலாக ஆதரவு தெரிவிக்கின்றனர்.** | |
| **ஆதாரங்கள் / Evidences**<br><br>**Why? How?** | • சிங்கப்பூர் மக்கள் ஒவ்வொரு ஆண்டும் 9 ஆகஸ்ட்டில் 12. ____________________ மகிழ்ச்சியோடு கொண்டாடுவர்.<br>• 1965-இல் மலேசியாவிலிருந்து சிங்கப்பூர் சுதந்திரம் பெற்றதை நினைவுகூறும் நோக்கில் தேசிய தினம் ஆண்டுதோறும் சிங்கப்பூர் 13. _________________________ விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.<br>• தேசிய நாளன்று மக்கள் அலைகடலாய்த் திரண்டு அன்று நடைபெறும் தேசிய நாள் அணிவகுப்புகளையும் (Parades), சிங்கப்பூர் நாட்டின் 14. ____________________ மற்றும் மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்கவரும் நடனங்களையும் கண்டு களித்து ஆதரவு வழங்குவார்கள்.<br>• அன்றைய பொழுது மாண்புமிகு பிரதமர் வழங்கவிருக்கும் தேசிய நாள் செய்தியை அறிந்து கொள்ள ஆர்வமாகக் காத்துக் கொண்டிருப்பர்.<br>• ஒவ்வோர் ஆண்டும் பதிவு செய்யப்படும் செய்தியில் சிங்கப்பூர் பிரதமர், உள்நாட்டு மற்றும் உலகளாவிய முன்னேற்றங்களை ஆராய்வதுடன், பொருளாதார செயல்திறன் (Economic Performance) மற்றும் தேசிய முன்னுரிமைகளைக் (Priorities) கோடிட்டுக் காட்டுவார்.<br>• அரசாங்கத்தின் செயல்பாடுகளை மக்களுடன் பகிர்ந்து கொண்டு, சிங்கப்பூர் நாட்டை மேம்படுத்த மக்களின் ஒருமித்த சிந்தனையின் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டுவார். |
| **Consequences / விளைவுகள்** | |
| **மக்கள் தேசிய தினத்தை ஆதரிக்கிறார்கள் என்றால் / Advantages** | • சிங்கப்பூர் மக்கள் தேசிய தினத்தை ஆதரிப்பதால் நாட்டுப்பற்று அதிகரிப்பதுடன் தேசிய உணர்வு என்றும் அழியாமல் இருக்கும்.<br>• தேசிய நாளில் நடத்தப்படும் கண்கவர் நடனங்களின் மூலம் வெவ்வேறு இனத்தவர்களின் பாரம்பரியத்தைச் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கலாம்.<br>• பிற இனத்தவருடன் ஒன்றிணைந்து வாழ்வதன் மகிமையை (Greatness) பிள்ளைகளுக்கு உணர்த்தலாம். |

<table>
<tr><td></td><td>

- மக்களின் ஆதரவைப் பொறுத்துதான் தேசிய தினம் கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. மக்கள் அதிகளவில் ஆதரவு தெரிவித்தால், தேசிய தினம் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்படுவதுடன் வெளிநாட்டுச் சுற்றுப்பயணிகளின் 15. ____________________ அதிகரிக்க முடியும்.
- சுற்றுப்பயணிகளின் அதிகரிப்பால் நாட்டின் பொருளாதாரமும் மேம்படும். இதனால் மக்கள் தேசிய நாள் கொண்டாட்டத்திற்கு முக்கியத்துவம் வழங்க வேண்டியது அவசியமாகும்.

</td></tr>
<tr><td>

**மக்கள் தேசிய தினத்தை ஆதரிக்கவில்லை என்றால் / Disadvantages**

</td><td>

- தேசிய நாள் மக்களால் புறக்கணிக்கப்பட்டால் தேசத்தின் மீதுள்ள 16. ____________________ நாளுக்கு நாள் குறையத் தொடங்கும்.
- ஒற்றுமை இல்லாத சூழல் நிலவும். மக்கள் சுயநலமாகச் செயல்படத் தொடங்குவர்.
- அரசாங்கத்தின் மீது எந்தப் பற்றும் இல்லாமல் அரசு பிறப்பிக்கும் (Implement) எந்தத் திட்டங்களுக்கும் தங்களை உட்படுத்திக் கொள்ள மறுப்பர்,

</td></tr>
<tr><td colspan="2">

**Solution / Suggestion - How?**
**தீர்வுகள் / ஆலோசனைகள் - எவ்வாறு?**

</td></tr>
<tr><td colspan="2">

ஒவ்வொரு சிங்கப்பூரரும் தங்கள் நாட்டின் மீது வைத்துள்ள மரியாதையையும் பற்றையும் காண்பிக்கத் தேசிய தினத்தில் கலந்துகொண்டு ஆதரவைத் தெரிவிக்க வேண்டும். மக்களின் வருகை மட்டுமல்லாது அவர்கள் நாட்டுக்காகச் செய்யும் சிறு செயல்களும் நாட்டுப்பற்றைக் காட்டும். அவை:

- பள்ளி மாணவர்கள் தேசிய தினக் கொண்டாட்டத்தன்று கையில் தேசிய 17. ____________________ ஏந்தியவாறு தம் தேசப்பற்றை வெளிக்காட்டலாம்.
- தேசிய கீதம் 18. ____________________ போது மக்கள் ஒன்றுகூடிப் பாடி தேச உணர்வைப் பகிர்ந்து கொள்ளலாம்.
- தேசிய நாளன்று நடைபெறும் பல கலாச்சார பாடல்களுக்கும் (Cultural Songs) நடனங்களுக்கும் முடிந்த வரை ஆதரவை வழங்கலாம்.

</td></tr>
</table>

**தேசிய தினக் கொண்டாட்டம் சார்ந்த அரசாங்கத் திட்டங்கள் / செயல்பாடுகள்**

- தேசிய தின அணிவகுப்பு (National Day Parade)
- தேசிய தினச் செய்தி (National Day Message)
- தேசிய தினக் கூட்ட உரை (National Day Rally Speech)
- வாண வேடிக்கை கொண்டாட்டம் (Fireworks Celebrations)

**வாய்மொழி தேர்வு சிறப்புத் தேர்ச்சிக்கான செய்யுள் & பொன்மொழி பட்டியல்**

1. அரசன் இல்லாத நாடு அச்சில்லாத தேர் *(பழமொழி)*
2. அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி *(பழமொழி)*
3. நா அசைய நாடும் அசையும் *(பழமொழி)*
4. வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
   துணைவலியும் தூக்கிச் செயல் *(திருக்குறள்)*
5. மன்னர்க்கழகு செங்கோன் முறைமை *(உலக நீதி)*
6. செங்கோல் அரசனே தெய்வம் ஆவான் *(பழமொழி)*
7. கொற்றவன் அறிதல் உற்றிடத்து உதவி *(கொன்றை வேந்தன்)*

**கீழே கொடுக்கப்பட்டுள்ள பொருளுக்குப் பொருத்தமான பட்டியலில் இருக்கும் செய்யுள் & பொன்மொழிகளின் எண்களை எழுதுக.**

| | |
|---|---|
| ஒரு குடும்பத்தில் அல்லது ஓர் அணியில் உள்ளவர்களின் பண்பு நலன்கள் அந்தக் குடும்ப / அணி தலைவரைச் சார்ந்துள்ளது. | |
| செயல்படுவதற்கான ஆற்றல், தனக்கு இருக்கும் ஆற்றல், பகைவரின் ஆற்றல், துணையாக அமையும் ஆற்றல், இவைகளை அறிந்து செயல்பட வேண்டும். | |
| நீதி தவறாமல் நாட்டை ஆளும் அரசாட்சியே தெய்வம் என்பர். | |
| அரசனின் நல்லாட்சி அவன் நாட்டைச் செழிப்பாக்கும். | |
| அச்சில்லாத தேரானது போகும் திசையில் இருந்து தடம் மாறுவது போல, அரசன் இல்லாத நாடும் சரியான திசையை அடையாது. | |
| தேவையிருக்கும் இடம் சென்று உதவி செய்தலே, ஆட்சி செய்வோர் அறிய வேண்டியது ஆகும் | |
| நீதி முறையோடு அரசு புரிதல் அரசருக்கு அழகாகும் | |

**SEC 4 / 5 HOW TO GET FULL SCORE IN TAMIL ORAL - REVISION GUIDE**
**உயர்நிலை 4 / 5 வாய்மொழி சிறப்புத் தேர்ச்சிக்கான வழிகாட்டி நூல்**

# விடைத்தாள்

**தேசிய தினக் கொண்டாட்டம்**

| | | |
|---|---|---|
| 1. சுதந்திரம் | 7. சரித்திரம் | 13. மக்களோடு |
| 2. கொண்டாட்டம் | 8. இருப்பதை | 14. வரலாறு |
| 3. குடிமகனுக்கும் | 9. முன்னோர்களை | 15. வரவையும் |
| 4. நாட்டின் | 10. தியாகத்திற்கு | 16. மரியாதை |
| 5. முன்னேற்றத்திற்காக | 11. நலனை | 17. கொடியை |
| 6. வளர்க்க | 12. தேசிய தினத்தை | 18. பாடும் |

| | |
|---|---|
| ஒரு குடும்பத்தில் அல்லது ஓர் அணியில் உள்ளவர்களின் பண்பு நலன்கள் அந்தக் குடும்ப / அணி தலைவரைச் சார்ந்துள்ளது. | 2 |
| செயல்படுவதற்கான ஆற்றல், தனக்கு இருக்கும் ஆற்றல், பகைவரின் ஆற்றல், துணையாக அமையும் ஆற்றல், இவைகளை அறிந்து செயல்பட வேண்டும். | 4 |
| நீதி தவறாமல் நாட்டை ஆளும் அரசாட்சியே தெய்வம் என்பர். | 6 |
| அரசனின் நல்லாட்சி அவன் நாட்டைச் செழிப்பாக்கும். | 3 |
| அச்சில்லாத தேரானது போகும் திசையில் இருந்து தடம் மாறுவது போல, அரசன் இல்லாத நாடும் சரியான திசையை அடையாது. | 1 |
| தேவையிருக்கும் இடம் சென்று உதவி செய்தலே, ஆட்சி செய்வோர் அறிய வேண்டியது ஆகும். | 7 |
| நீதி முறையோடு அரசு புரிதல் அரசருக்கு அழகாகும். | 5 |